# SSC PUBLIC EXAMINATIONS – 2026
# FIRST LANGUAGE – TAMIL MODEL QUESTION PAPER 2025-26

**Class: X  Max Marks: 100  Time: 3.15 Hrs**

## WEIGHTAGE TABLES

### Table (1): Weightage to Academic Standards

| வ.எண் | கல்வித் திறன்கள் | மதிப்பெண் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | புரிந்துக் கொள்ளுதல் - விடையளித்தல் | 24 | 24% |
| 2 | சுயமாக எழுதுதல் - படைப்பாற்றல் | 44 | 44% |
| 3 | மொழித்திறன் | 32 | 32% |
| மொத்தம் | | | 100% |

### Table (2) : Weightage to Content

| வ.எண் | பாடப்பொருள் | மதிப்பெண் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | செய்யுள் | 20 | 20% |
| 2 | உரைநடை | 20 | 20% |
| 3 | துணைப்பாடம் | 20 | 20% |
| 4 | செய்யுள் உரைநடையிலிருந்து படைப்பாற்றல் வினா | 08 | 08% |
| 5 | மொழித்திறன் | 32 | 32% |
| **மொத்தம்** | | 100 | 100% |

### Table (3) : Weightage to Type of Question

| வ.எண் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் | மொத்த மதிப்பெண் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | நெடுவினா | 07 | 08 | 56 | 56% |
| 2 | சிறுவினா | 03 | 04 | 12 | 12% |
| 3 | குறுவினா | 09 | 02 | 18 | 18% |
| 4 | புறவயவினா | 14 | 01 | 14 | 14% |
| மொத்தம் | | 33 | | 100 | 100% |

**SSC PUBLIC EXAMINATIONS – 2026**

**FIRST LANGUAGE TAMIL – MODEL QUESTION PAPER 2025-26**

**Class : X ]** **(Max. Marks : 100)** **[ Time : 3.15 Hrs.**

## BLUE PRINT

| வ.எண் | கல்வித் திறன்கள் | புரிந்துகொள்ளுதல் - விடையளித்தல் | | | | சுயமாக எழுதுதல் - படைப்பாற்றல் | | | | மொழித்திறன் | | | | மொத்தம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாடம் | நெடு வினா | சிறு வினா | குறு வினா | புறவய வினா | நெடு வினா | சிறு வினா | குறு வினா | புறவய வினா | நெடு வினா | சிறு வினா | குறு வினா | புறவய வினா | நெடு வினா | சிறு வினா | குறு வினா | புறவய வினா |
| **1** | செய்யுள் | $(8)^1$ | | | | $(8)^1$ | $(4)^1$ | | | | | | | $(8)^2$ | $(4)^1$ | | |
| **2** | உரைநடை | $(8)^1$ | | | | $(8)^1$ | $(4)^1$ | | | | | | | $(8)^2$ | $(4)^1$ | | |
| **3** | துணைப்பாடம் | $(8)^1$ | | | | $(8)^1$ | $(4)^1$ | | | | | | | $(8)^2$ | $(4)^1$ | | |
| **4** | செய்யுள்/ உரைநடை படைப்பாற்றல் வினா | | | | | $(8)^1$ | | | | | | | | $(8)^1$ | | | |
| **5** | மொழித்திறன் | | | | | | | | | | | $(2)^9$ | $(1)^{14}$ | | | $(2)^9$ | $(1)^{14}$ |
| | **மொத்தம்** | 24 | | | | 44 | | | | 32 | | | | 100 | | | |

Note: - Outside of the brackets No. of questions

Within the brackets Allotted Marks

Signature of the Teacher :

Cell No :

## வினாவகை விளக்கப் பட்டியல் – முதன்மொழி - தமிழ்

| வ.எண் | கல்வித் திறன்கள் | வினா எண் | வினா அமைப்பு | மதிப் பெண் | வினா வகை | வினாவின் தன்மை |
|---|---|---|---|---|---|---|
| 1 | புரிந்துக் கொள்ளுதல் விடையளித்தல் | 1 | அறிந்த செய்யுள் (உள்விருப்பத் தேர்வு உள்ளது) | 8 ம | நெடுவினா | – செய்யுள் பாடத்தில் நட்சத்திர ( * ) குறியீடு உள்ள பகுதி மட்டும் |
| | | 2 | அறிந்த உரைநடை | 8 ம | நெடுவினா | – உரைநடைப் பகுதியில் முக்கியமானது<br>– ஆறேமு வாக்கியங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>– விடை முழுமையாக எழுத வேண்டும். |
| | | 3 | துணைப்பாடம் நிகழ்வுகளை வரிசைப்படுத்துதல் | 8 ம | நெடுவினா | – நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுதல்.<br>– நிகழ்வுகள் ஒரே பாடத்தில் அமைய வேண்டும்.<br>– ஒரே பாடத்தில் இரண்டு நிகழ்வுகள் தரக்கூடாது. |
| 2 | சுயமாக எழுதுதல் - படைப்பாற்றல் | 4 | ஆசிரியர்/ நூல் குறிப்பு | 4 ம | சிறுவினா | – செய்யுட் பகுதியிலிருந்து மட்டுமே தரவேண்டும். |
| | | 5 | சிறப்பு அம்சங்கள்/ கருத்து | 4 ம | சிறுவினா | – உரைநடைப் பகுதியிலிருந்து மட்டுமே தரவேண்டும். |
| | | 6 | பண்புநலன் | 4 ம | சிறுவினா | – துணைப்பாடப் பகுதியிலிருந்து கதை மாந்தர் பற்றி மட்டுமே வினா அமைய வேண்டும். |
| | | 7 | செய்தி/ கருத்து (உள்விருப்பத் தேர்வு உள்ளது) | 8 ம | நெடுவினா | – செய்யுட் பகுதியிலிருந்து மட்டுமே வினா தரவேண்டும். |
| | | 8 | செய்தி/ கருத்து (உள்விருப்பத் தேர்வு உள்ளது) | 8 ம | நெடுவினா | – உரைநடைப் பகுதியிலிருந்து மட்டுமே வினா தரவேண்டும். |
| | | 9 | செய்தி/ கருத்து (உள்விருப்பத் தேர்வு உள்ளது) | 8 ம | நெடுவினா | – துணைப்பாடப் பகுதியிலிருந்து மட்டுமே வினா தரவேண்டும். |
| | | 10 | செய்தி/ கருத்து (உள்விருப்பத் தேர்வு உள்ளது) | 8 ம | நெடுவினா | – நெடுவினா கடிதமாகவும், அடுத்த வினா கட்டுரை, உரையாடல், வருணனை, நேர்க்காணல் வாழ்த்து மடல், கையெழுத்து இதழ், விளம்பரம் முதலிய வகை சார்ந்ததாக அமைய வேண்டும். |
| 3 | மொழித்திறன் | 11 | அணியை அடையாளம் காணுதல்/ விளக்குதல் | 2 ம | குறு வினா | பாடப்புத்தகத்தில் உள்ள அணி இலக்கணப் பகுதியிலிருந்து மட்டும் வினா தரப்படும். |
| | | 12 | திருக்குறள் குறட்பாவை அலகிடுதல், வாய்பாடு எழுதுதல் | 2 ம | குறு வினா | திருக்குறள் குறட்பா மட்டும் தரப்படும். அலகிட்டு வாய்பாடு எழுத வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 13அ<br>13ஆ | பொருள் எழுதுதல்<br>பொருளைக் கண்டுபிடித்தல் | 1 ம<br>1 ம | குறு வினா | செய்யுட் பகுதியிலிருந்து மட்டும்<br>செய்யுட் பகுதியிலிருந்து மட்டும் |
| | | 14அ<br>14ஆ | இருபொருள் எழுதுதல்<br>ஒரு பொருள் தரும் பலசொற்கள் கண்டுபிடித்தல் | 1 ம<br>1 ம | குறு வினா | பாடப்புத்தகம்/ பொது<br>பாடப்புத்தகம்/ பொது |
| | | 15அ<br>15ஆ | தொகைச் சொல் எழுதுதல்<br>பிறமொழிச் சொல்லுக்கு தமிழ்ச் சொல்லை கண்டுபிடித்தல் | 1 ம<br>1 ம | குறு வினா | பாடப்புத்தகத்திலிருந்து மட்டும்<br>பாடப்புத்தகம்/ பொது |
| | | 16அ<br>16ஆ | அகப்பொருள் - இலக்கணம்<br>புறப்பொருள் இலக்கணம் கண்டுபிடித்தல் | 1 ம<br>1 ம | குறு வினா | அகப்பொருள் இலக்கணத்திலிருந்து மட்டும்<br>புறப்பொருள் இலக்கணத்திலிருந்து மட்டும் |
| | | 17அ<br>17ஆ | மரபுத் தொடருக்குப் பொருள்<br>மரபுத் தொடருக்கு பொருள் கண்டுபிடித்தல் | 1 ம<br>1 ம | குறு வினா | பாடப்புத்தகத்திலிருந்து மட்டும் பொருள் எழுதுதல்<br>பாடப்புத்தகத்திலிருந்து மட்டும் விடையை கண்டுபிடித்தல் |
| | | 18 | உவமைத் தொடரை வாக்கியத்தில் அமைத்தல் | 2 ம | குறு வினா | பாடப்புத்தகத்திலிருந்து மட்டும் |
| | | 19 | உவமைத் தொடரை வாக்கியத்தில் அமைத்தல் | 2 ம | குறு வினா | பாடப்புத்தகத்திலிருந்து மட்டும் |
| | | 20 | வழு, வழா நிலை | 1 ம | புறவய வினா | பாடப்புத்தகத்திலிருந்து வழு, வழாநிலை பகுதியிலிருந்து மட்டும் |
| | | 21 | பிரித்தெழுதுதல்/ சேர்த்தெழுதுதல் | 1 ம | புறவய வினா | |
| | | 22 | இலக்கணக் குறிப்பு கண்டுபிடித்தல் | 1 ம | புறவய வினா | செய்யுட் பகுதியிலிருந்து வினா கேட்டல் |
| | | 23 | இலக்கணக் குறிப்பு எழுதுதல் | 1 ம | புறவய வினா | செய்யுட் பகுதியிலிருந்து மட்டும் வினா கேட்டல் |
| | | 24 | பகுபத உறுப்பு - கண்டுபிடித்தல் | 1 ம | புறவய வினா | பாடப்புத்தகத்தில் உள்ள பகுபத உறுப்புகள் - விடை கண்டுபிடித்தல் |
| | | 25 | பகுபத உறுப்பு - கண்டுபிடித்தல் | 1 ம | புறவய வினா | பாடப்புத்தகத்தில் உள்ள பகுபத உறுப்புகள் - விடை கண்டுபிடித்தல் |
| | | 26 | தொகைநிலை/ தொகா நிலைத் தொடர் - எழுதுதல் | 1 ம | புறவய வினா | பாடப்புத்தகத்திலிருந்து தொகை/ தொகா நிலைகளிலிருந்து வினா கேட்டல் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 27 | செயப்பாட்டு வினைத்தொடரை கண்டுபிடித்தல் | 1 ம | புறவய வினா | பாடப்புத்தகம்/ பொது செயப்பாட்டு வினைத்தொடரைக் கண்டுபிடித்தல் |
| | | 28 | கலவைத் தொடராக மாற்றி எழுதுதல் | 1 ம | புறவய வினா | தனி, தொடர், கலவைத் தொடர்களில் வினா கேட்டல் |
| | | 29 | தொடர்களைக் கண்டுபிடித்தல் | 1 ம | புறவய வினா | செய்வினை, தன்வினை, பிறவினை, உடன்படு, எதிர்மறை, உணர்ச்சி, கட்டளை, செய்தி தொடர்களில் வினா |
| | | 30 | தொடரைக் கண்டுபிடித்தல் | 1 ம | புறவய வினா | செய்வினை, தன்வினை, பிறவினை, உடன்படு, எதிர்மறை, உணர்ச்சி, கட்டளை, செய்தி தொடர்களில் வினா |
| | | 31 | வினாவை எழுதுதல் | 1 ம | புறவய வினா | வினா – பாடப்பகுதியிலிருந்து வினா கேட்டல் |
| | | 32 | விடையைக் கண்டுபிடித்தல் | 1 ம | புறவய வினா | விடை – பாடப்பகுதியிலிருந்து வினா கேட்டல் |
| | | 33 | சரியான பொருள்கோளை எழுதுதல் | 1 ம | புறவய வினா | பாடப்பகுதியிலிருந்து வினா கேட்டல் – விடை எழுதுதல் |

# TAMIL - FIRST LANGUAGE
# தமிழ் (முதன்மொழி)
## MODEL QUESTION PAPER: 2025 - 2026
## மாதிரி வினாத்தாள்-2: 2025-2026

**Class : X ]** **(Max. Marks : 100)** **[ Time : 3.15 Hrs.**

**மாணவர்களுக்கு குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாளில் மொத்தம் 3 பகுதிகள் உள்ளது.
2. வினாத்தாளை படிப்பதற்கு 15 நிமிடங்களும் விடைகளை எழுதுவதற்கு 3 மணி நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.
3. அனைத்து வினாக்களுக்கும் விடைகளை விடைத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.
4. விடைகளையும் திருத்தமாகவும், தெளிவாகவும் எழுத வேண்டும்.

### பகுதி - I

**I. புரிந்து கொள்ளுதல் – விடையளித்தல் : (24 மதிப்பெண்கள்)**

1. கீழ்க்காணும் செய்யுளைப் படித்து, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையி. 8 ம

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

**வினாக்கள்:**

அ. தமிழ்மொழி எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?

ஆ. செய்யுளில் இடம்பெற்ற கண்டத்தின் பெயரென்ன?

இ. செந்தமிழ் –இச்சொல்லை பிரித்தெழுதுக.

ஈ. பேரரசு – இச்சொல்லிற்கு இலக்கண குறிப்பு எழுதுக.

**(அல்லது)**

**[ Turn Over**

வெய்யோனொளி தன்மேனியின் வரிசோதியின் மறையப்
பொய்யோவெறு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.

– கம்பர்

**வினாக்கள்:**

அ. வெய்யோன் – இச்சொல்லுக்கு பொருள் யாது?

ஆ. இளையான் என்பது செய்யுளில் யாரைக் குறிக்கிறது?

இ. செய்யுளில் 'மேகம்' எனும் பொருள் தரும் சொல் எது?

ஈ. சீதையின் கணவன் பெயரென்ன?

**2. கீழ்க்காணும் அறிந்த உரைநடையைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.** 8 ம

கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமகாலக் கருத்துகளையும், நிகழ்வுகளையும் சமகால மொழியில் சமகால உணர்வில் தந்தவர். சிறுகதை, புதினம், திரைப்படம், முன்னுரை, பேட்டி என எதைத் தொட்டாலும் தனிமுத்திரை படைத்தவர். இலக்கியத்திற்கான சாகித்திய அகாதெமி விருது, ஞானபீட விருது போன்ற பெரும் விருதுகளை வென்றவர். மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர் ஜெயகாந்தன். அவரது காந்தத் தன்மையுடைய எழுத்தை நினைவூட்டும் வகையில் இப்பத்தி அமைகிறது.

**வினாக்கள்:**

அ. ஜெயகாந்தன் படைத்த இலக்கியங்கள் எப்படிப்பட்டவை?

ஆ. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?

இ. இப்பத்தி எதைப்பற்றி கூறுகிறது?

ஈ. ஜெயகாந்தன் பங்குபெற்ற படைப்பு வகைகள் யாவை?

[ Contd... 3rd

**3. கீழ்க்காணும் துணைப்பாடக் கதையை வரிசைப்படுத்தி எழுதுக.** 8 ம

அ. எம்.எஸ்.சுப்புலட்சுமி 1974இல் நோபல் பரிசுக்கு இணையான மகசேசே விருது பெற்றார்.

ஆ. பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகாதெமியில் மேதைகள் பலர் முன்பு கச்சேரி செய்து பாராட்டைப் பெற்றார்.

இ. ஒரு பெண் நினைத்தால், முயன்றால், முன்னேறலாம், வெல்லலாம். நீங்களும் முயலுங்கள்; முன்னேறுங்கள்; வெல்லுங்கள்.

ஈ. 1954இல் நான் தாமரையணி விருது பெற்றபோது, என்னைத் தொட்டுத் தடவிப் பாராட்டிய பார்வையிழந்த ஹெலன் கெல்லரை என்னால் மறக்க முடியாது.

## II. சுயமாக எழுதுதல் – படைப்பாற்றல் : (44 மதிப்பெண்கள்)

**கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் விடையளி.** 3×4=12 ம

**4.** பரிபாடல் – நூற்குறிப்பு எழுதுக.

**5.** கரகாட்டம் குறித்து எழுதுக.

**6.** 'மேரிஜேன்' – பண்பு நலன் குறித்து எழுதுக.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு எட்டு அல்லது பத்து வாக்கியங்களில் விடையளி.** 4×8=32 ம

**7.** மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்கு.

**(அல்லது)**

இறைவன், புலவர் இடைக்காடனார் குரலுக்கு செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

**8.** 'மனிதனால் மாசடையும் நான்' – என 'காற்று' கூறியவற்றை தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.

**9.** 'புயலிலே ஒரு தோணி' -கதையை கட்டுரை வடிவில் எழுதுக.

**(அல்லது)**

'இராமனுசர்' - நாடகம்: கட்டுரை வடிவில் கதையை எழுதுக.

**10.** உங்கள் பள்ளியில் நடைபெறும் 'நாட்டுநலப்பணித்திட்ட முகாமின்' தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை எழுதுக.

**(அல்லது)**

'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்'-இத்தலைப்பில் கட்டுரை எழுதுக.

III. **மொழித்திறன் : (32 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி.** 9×2=18 ம

**11.** சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள், இழிகுருதி -பாய்ந்து
திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்,
மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து
மேற்காணும் செய்யுளில் அமைந்துள்ள அணியைச்சுட்டி
விளக்கம் தருக. 2ம

**12.** பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

மேற்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு எழுதுக. 2ம

**13.** (அ) கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து -அடிக்கோடிட்ட "கடும்பு" எனும் சொல்லின் பொருளை எழுதுக. 1ம

(ஆ) மாளாத காதல் நோயாளன் போல் -அடிக்கோடிட்ட 'மாளாத' என்னும் சொல்லின் பொருளை கண்டுபிடி. 1ம

1. சொல்லாத 2. தராத 3. செய்யாத 4. தீராத

[ Contd... 5th

**14**. (அ) ஈதல் இசைபட வாழ்தல் -இவ்வடியில் அடிக்கோடிட்ட ‘இசை’ என்னும் சொல்லின் இருபொருளை எழுதுக. 1ம

(ஆ) ஒரு சொல்லாவது சொல் தமிழே -இவ்வடியில் அடிக்கோடிட்ட ‘சொல்’ எனும் பொருள்தரும் பல சொற்களைக் கண்டுபிடி. 1ம

1. பதம், கிளவி 2.மொழி, செப்புதல்

3. கூறுதல்,பதம் 4. கிளவி,இயம்புதல்

**15.** (அ) முத்தேவர் முத்தொழில் புரிந்தனர். -இத்தொடரில் ‘முத்தொழில்’ என்னும் தொகைச் சொல்லை விரித்தெழுதுக. 1ம

(ஆ) என் கஜானா காலியாகிவிட்டது மன்னா. -இத்தொடரில் ‘கஜானா’ எனும் பிறமொழிச்சொல்லிற்கு நிகரான தமிழ்ச்சொல்லைக் கண்டுபிடி.
1. கருவூலம் 2. புதையல் 3. பொக்கிஷம் 4. பணம் 1ம

**16**. (அ) முல்லை நிலத்தின் பெரும்பொழுது யாது? 1ம

(ஆ) தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடல் எவ்வகைத்திணை கண்டுபிடி. 1ம

1. கரந்தைத் திணை 2. வெட்சித் திணை

3. காஞ்சித் திணை 4. தும்பைத் திணை

**17**. (அ). கண்ணும் கருத்தும் - இம்மரபுச்சொல்லை வாக்கியத்தில் அமைத்து எழுதுக. 1ம

(ஆ). மனக்கோட்டை -இம்மரபுத்தொடருக்குப் பொருளைக் கண்டுபிடி. 1ம

**18.** தாமரை இலை நீர்போல -இவ்வுவமைத்தொடரை வாக்கியத்தில் அமைக்கவும். 2ம

**19.** மழைமுகம் காணாப் பயிர்போல -இவ்வுவமைத்தொடரை வாக்கியத்தில் அமைக்கவும். 2ம

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடை எழுதுக. 14x1=14ம

**20**. ‘நீ வந்தேன்’ என்பது எவ்வகை வழு? 1ம

**21**. எந்தமிழ்நா - பிரித்து எழுதுக. 1ம

[ Turn Over

**22**. 'வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்' –அடிக்கோடிட்ட உரைத்தல் எனும் சொல்லிற்கு இலக்கணக் குறிப்பைக் கண்டுபிடி. 1ம

அ) வினைத்தொகை ஆ) தொழிற்பெயர்

இ) வேற்றுமைத்தொகை ஈ) தொகுத்தல் விகாரம்

**23**. 'ஓதுதல்' – இச்சொல்லிற்கு இலக்கணம் குறிப்பு எழுதுக. 1ம

**24**. அறுவகைப் பெயர்கள் இடம்பெறும் பகுபத உறுப்பு எது? கண்டுபிடி.

அ). பகுதி ஆ) இடைநிலை இ) விகாரம் ஈ) விகுதி 1ம

**25**. 'அறியேன்' – இப்பகுமுபதத்தின் விகுதிகளைக் கண்டுபிடி.

1. என் 2. யேன் 3. ஏன் 4. ன் 1ம

**26**. 'பாடி மகிழ்ந்தனர்' – என்பது எவ்வகைத் தொகாநிலைத்தொடர்? 1ம

**27**. தமிழரசி படத்தை வரைந்தாள் – எனும் இச்செய்வினைத்தொடர் செயப்பாட்டு வினைத்தொடராக எவ்வாறு மாறும்? கண்டுபிடி. 1ம

**28**. அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.–இத்தொடரைக் கலவைத்தொடராக மாற்றி எழுதுக. 1ம

**29**. இந்திரா திருக்குறள் கற்பித்தாள்– என்பது எவ்வகைத்தொடர் கண்டுபிடி.

அ) பிறவினை ஆ) எதிர்மறை

இ) தன்வினை ஈ) பொதுவினை 1ம

**30**. ஐயகோ! விமான விபத்து ஏற்பட்டுவிட்டதே! – என்பது எவ்வகைத்தொடர். 1ம

**31**. மாணவரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று ஆசிரியர் கேட்டல் எவ்வகை வினா? 1ம

**32**. 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போவேன்' என்று கூறும் விடை, எவ்வகை விடை? கண்டுபிடி. 1ம

அ) சுட்டுவிடை ஆ) மறைவிடை

இ) ஏவல் விடை ஈ) நேர்விடை

**33**. சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல் 1ம
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்ந்தவே.

– இப்பாடலில் பயின்று வந்துள்ள பொருள்கோளை எழுதுக.